# வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு
# இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில்
# பதிவு செய்து வெளிநாட்டு வேலைவாய்ப்பில் இருக்கும் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு
# புலமைப் பரிசில்களைப் பகிர்ந்தளித்தல் - 2025

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து கொண்டு தொழில்வாய்ப்புக் கருதி வெளிநாடு சென்ற / சென்றுள்ள பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு வழங்கும் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் (**www.slbfe.lk**) என்ற பணியக இணையத்தளத்தினூடாக (online) தற்போது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

**தகைமைகள்**

**அ) 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில்**

- குறிப்பிட்ட விண்ணப்பதாரியின் தாய் அல்லது தந்தை 2019.09.15 ஆம் திகதியிலிருந்து 2024.09.15 ஆம் திகதி வரையில் இவ் இடைப்பட்ட காலப்பகுதியில் பணியத்தில் பதிவு செய்து வெளிநாட்டில் தொழில் புரிந்திருத்தல் வேண்டும்.
- 2024 ஆம் ஆண்டிற்கான 05 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சையில் மாவட்ட வெட்டுப் புள்ளியில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**தரவேற்றப்பட வேண்டிய (Upload) ஆவணங்கள்**

- விண்ணப்பதாரியின் பிறப்பு அத்தாட்சி பத்திரத்தின் மூலப்பிரதி.
- பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 5 வருட புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழின் மூலப்பிரதி.
- புலம்பெயர் தாய் / தந்தையின் கடவுச்சீட்டின் புகைப்படமுள்ள பக்கத்தின் பிரதி.

➢ **முக்கிய குறிப்பு :-**

- விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழின் பிரதி மற்றும் பரீட்சை திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 5 வருட புலமைப்பரிசில் பரீட்சை சான்றிதழின் பிரதியையும் பிள்ளை படிக்கும் பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவான் மூலம் சான்றளிக்கப்பட்ட பிரதியை கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். அந்த ஆவணங்களின் வலது பக்க மேல் மூலையில் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்த பிறகு நீங்கள் பெறும் தொடர் இலக்கத்தை **(Reference No.)** குறிப்பிட்டு அனுப்புமாறு அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆ) க.பொ.த. (சாதாரண தரம்) புலமைப்பரிசில்**

- குறிப்பிட்ட விண்ணப்பதாரியின் தாய் / தந்தை 2019.05.06 ஆம் திகதியிலிருந்து 2024.05.06 ஆம் திகதி வரையில் இவ் இடைப்பட்ட காலப்பகுதியில் பணியத்தில் பதிவு செய்து வெளிநாட்டில் தொழில் புரிந்திருத்தல் வேண்டும்.
- 2023(2024) ஆம் ஆண்டிற்கான க.பொ.த (சா/த) பரீட்சையில் கணித பாடம் உட்பட குறைந்தது 06 பாடங்களில் சித்திபெற்று அதில் 03 பாடங்களில் விருது சித்தியுடன் க.பொ.த (உ/தர) கற்பவராக இருத்தல் வேண்டும்.

**தரவேற்றப்பட வேண்டிய (Upload) ஆவணங்கள்**

- விண்ணப்பதாரியின் பிறப்பு அத்தாட்சி பத்திரத்தின் மூலப்பிரதி.
- பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட க.பொ.த (சா/த) பரீட்சை பெறுபேற்று சான்றிதழின் மூலப்பிரதி.
- விண்ணப்பதாரியின் தேசிய அடையாளஅட்டை.
- புலம்பெயர் தாய்/தந்தையின் கடவுச்சீட்டின் புகைப்படமுள்ள பக்கத்தின் மூலப் பிரதி.

➢ **முக்கிய குறிப்பு :-**

விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழின் பிரதி மற்றும் பரீட்சை திணைக்களத்தினால் வழங்கப்பட்ட க.பொ.த – (சா/தரம்) பரீட்சை சான்றிதழின் பிரதியையும் பிள்ளை படிக்கும் பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவான் மூலம் சான்றளிக்கப்பட்ட பிரதியை கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். அந்த ஆவணங்களின் வலது பக்க மேல் மூலையில் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்த பிறகு நீங்கள் பெறும் தொடர் இலக்கத்தை **(Reference No.)** குறிப்பிட்டு அனுப்புமாறு அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இ) க.பொ.த. (உயர் தரம்) புலமைப்பரிசில்**

- குறிப்பிட்ட விண்ணப்பதாரியின் தாய்/தந்தை 2019.01.04 ஆம் திகதியிலிருந்து 2024.01.04 ஆம் திகதி வரையில் இவ் இடைப்பட்ட காலப்பகுதியில் பணியத்தில் பதிவு செய்து வெளிநாட்டில் தொழில் புரிந்திருத்தல் வேண்டும்.
- 2023(2024) ஆம் ஆண்டு க.பொ.த (உயர் தரம்) பரீட்சையில் சித்தியடைந்து தற்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அரச அல்லது தனியார் பல்கலைக்கழகமொன்றில் முழுநேர பட்டப்படிப்பு அல்லது க.பொ.த **(உ/தர)** பரீட்சையில் சித்தியடைந்து தேசிய தொழிநுட்பக் கல்லூரி அல்லது வேறு ஏதேனும் அரசுக் கல்வி நிறுவனத்தில் இரண்டு வருடங்கள் அல்லது அதற்கு மேலதிகமான டிப்ளோமா பாடநெறிகளை கற்பவராக இருத்தல் வேண்டும்.

**தரவேற்றப்பட வேண்டிய (Upload) ஆவணங்கள்**

- விண்ணப்பதாரியின் பிறப்பு அத்தாட்சி பத்திரத்தின் மூலப்பிரதி.
- பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட க.பொ.த (உ/த) பரீட்சை பெறுபேற்று சான்றிதழின் மூலப்பிரதி.
- விண்ணப்பதாரியின் தேசிய அடையாள அட்டை.
- குறிப்பிட்ட கல்வி நிறுவன பதிவாளரினால் மாணவர் தகுதியை உறுதிப்படுத்திய கடிதத்தின் மூலப்பிரதி.
- புலம்பெயர் தாய்/தந்தையின் கடவுச்சீட்டின் புகைப்படமுள்ள பக்கத்தின் மூலப் பிரதி.

➢ **முக்கிய குறிப்பு :-**

பிள்ளையின் பிறப்புச் சான்றிதழ மற்றும பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட க.பொ.த (உ/த) பரீட்சை பெறுபேற்று சான்றிதழ்கள் என்பவற்றின் பிரதியை பிள்ளை கல்வி பயிலும் பாடசாலை அதிபர், சமாதான நீதவான் அல்லது உயர்கல்வி நிறுவனத்தின் பதிவாளரால் சான்றுப்படுத்தி கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும். மேலும் பதிவேற்றம் செய்த பிறகு பெறப்படும் தொடர் இலக்கத்தை (**Reference No**) ஆவணத்தின் வலது பக்க மேல் மூலையில் குறிப்பிடுமாறு தயவாய் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மிக முக்கியமானவை:**

★ ஒரு பிரிவுக்கு ஒரு முறை மாத்தரமே உதவித் தொகைக்கு விண்ணப்பிக்கலாம்.
★ விண்ணப்பப்படிவம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி : 2025.09.15

தொலைபேசி இல: 0112365471/1989
தகவல்களுக்கு : **www.slbfe.lk**

**முகவரி :**
முகாமையாளர் (நலன்புரி)
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்,
05 ஆம் மாடி, 'மெஹெவர பியஸ'
நாராஹேன்பிடி, கொழும்பு

தலைவர்
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்